மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 14 /2025**

வா.சா. 1 கண்ணன், த–பெ. தங்கவேல்

நாள்: 15.07.2026

( 03.07 பி.ப முதல் 03.27 பி.ப வரை)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

**1)** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கொத்தனார் வேலை மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். குருவம்மாள் படிக்கவில்லை. வேல்மயில் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. பாலமுருகன் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளார். பாலமுருகன் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் பஞ்சாயத்து அலுவலகத்தில் கிளர்க்காக பணிபுரிந்து வருகிறார். விஸ்வநாதன் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவர் என்ன வேலை பார்த்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 3 வது பிரதிவாதி என்னுடன் பிறந்த சகோதரர். அவர் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். நடத்துனராக வேலை பார்த்து வருகிறார். என்னுடன் பிறந்த சகோதரிகள் திருமணம் முடிந்து அவரவர் கணவர் ஊரில் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

2) 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்று சொன்னால் சரியல்ல பக்கத்து வீட்டுக்காரர்கள். மேற்படி பிரதிவாதிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்றும் வழக்குக்காக பழக்கம் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 1 மற்றும் 2 பிரதிவாதிகளை

எனக்கு சிறுவயதிலிருந்தே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நானும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் ஒரே தெருவில் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். நான் மறவர் தெற்கு தெருவில் கதவு எண் 78A ல் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மறவர் தெற்கு தெருவில் கதவு எண் 77 ல் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீடும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் வீடும் அடுத்தடுத்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய சகோதரர் வெளியூரில் இருந்து வந்த காரணத்தினால் அவரை இந்த வழக்கில் 3 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்று வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் அவரை பிரதிவாதியாக கட்சி சேர்த்திருப்பதாக தான் கூறியுள்ளேன். 3 வது பிரதிவாதி வெளியூரில் இருந்து வருகிறார் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அவர் வெளியூரில் இல்லை.

3) நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதில் நான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய குடும்பத்தில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதை காண்பிக்க வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாயார் உயிருடன் இருந்த காலத்திலேயே வழக்கு சொத்தினை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுடன் கிரைய ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றும் அதன் அடிப்படையில் கிரைய தொகையை பெற்றுக் கொண்டார்கள் என்ற விபரமும் எனக்கும் என்னுடன் பிறந்தவர்களுக்கும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரரான 3 வது பிரதிவாதி என்னுடைய தாயார் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த உடன்படிக்கை சரியானது என்ற காரணத்தினால் வழக்குக்கு ஒத்துழைக்க

மாட்டேன் என்று கூறிவிட்டதனால் அவரை இந்த வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4) வழக்குச் சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கால்நடை வைத்து பால் வியாபாரம் செய்யும் கடை வைத்துள்ளார்கள் என்றும் மீதி இடத்தில் கால்நடைகளை கட்டி பராமரித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் மின் இணைப்பு பெற்று கொட்டகை அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 30 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 30 வருடங்களாக வழக்கு சொத்தில் கடை வைத்து அனுபவம் செய்து வரும் விவரம் ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவம் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தினை யாரெல்லாம் அனுபவம் செய்து வருகிறோம் என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேலும் 3வது பிரதிவாதியும் வழக்கு சொத்தினை அனுபவம் செய்து வந்தார் என்ற விவரத்தினை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) 1994ம் வருடம் செப்டம்பர் மாதம் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் என்னுடைய தாயாருடன் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணம் குறித்து எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தினை என்ன வகையில் அனுபவம் செய்து வருகிறேன் என்ற விவரத்தினை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த காலத்திலும் வழக்கு சொத்தினை நாங்கள் அனுபவம் செய்யவில்லை என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

(1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு